DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
HMOP NO. 82 /2023
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW1 |
| Name | : | **முத்துக்குமார்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 20.11.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 08.06.2016 ம் ஆண்டு உபயமனுதாரர்களுக்கு இடையே நடைபெற்ற திருமண பத்திரிக்கை அசல் **ம.சா.ஆ.1** ஆகும். வாசுதேவநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உபயமனுதார்களின் திருமணத்தை பதிவு செய்ததற்கான திருமண பதிவு(பதிவு எண். 1/2018)(அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.சா.ஆ.2** ஆகும். உபயமனுதார்களின் திருமண

புகைப்படம் **ம.சா.ஆ.3** ஆகும். மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.சா.ஆ.4** ஆகும். மனுதாரரின் பெண் குழந்தையின் பிறப்பு சான்று நகல் (கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது) **ம.சா.ஆ.5** ஆகும். 22.03.2022 ல் சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதார் எதிர்மனுதார் மீது சேர்ந்து வாழ்வதற்கு கொடுத்த புகார் மனுவிற்கு காவல் நிலையத்தில் கொடுத்த ரசீது (ரசீது எண். 63/2022) **ம.சா.ஆ.6** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

08.06.2016 ம் ஆண்டு தான் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்தின் பயனாக எனக்கு ஒரு பெண் குழந்தை இருந்து வருகிறது என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு போட்ட சீர்வரிசைகள் மற்றும் பண்ட பாத்திரங்கள் , நகைகள் அனைத்தையும் எதிர் மனுதாரருக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற சண்டைகளை ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பேசி பார்த்தும் தீர்க்க முடியவில்லை என்றால் சரிதான். நானும், எதிர் மனுதாரரும் இனிமேல் சேர்ந்து வாழ வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு பெண் குழந்தை இருப்பதால் அது மேஜர் ஆனதும் அந்த குழந்தைக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுப்பேன் என்றால் சரிதான். மனுவில் பொய்யான குற்றச்சாட்டுக்களை மறுக்கும் பட்சத்தில் புகார் திரும்ப பெறுவதற்கு தயாராக இருக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-P.Mahindra Varma)

Subordinate Judge,
Sankarankovil.